**செய்தி வெளியீடு எண் :376** **நாள்: 11.03.2022**

**மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல் துறை மற்றும் வனத் துறை அலுவலர்கள் மாநாட்டின் இரண்டாம் நாளான இன்று (11.3.2022) நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கான மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய தொடக்க உரை.**

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு உயர் அதிகாரிகளே!

மாவட்ட ஆட்சித் தலைவர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

தொடக்கத்திலே நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்கள் விளக்கமாக, விரிவாக இந்தக் கூட்டத்தினுடைய நோக்கத்தைப் பற்றி, இதில் எப்படி உங்களுடைய கருத்துக்களை எடுத்து வைக்க வேண்டும் என்பதைப் பற்றியும், நாம் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்தும் இங்கே விளக்கமாக, விரிவாக எடுத்து வைத்திருக்கிறார்கள். எனவே, நான் அது குறித்து அதிகம் உங்களிடத்திலே பேச வேண்டிய அவசியம் இல்லை. இருந்தாலும், தொடக்க உரையாக, சுருக்க உரையாக என்னுடைய உணர்வை உங்களிடத்தில் நான் வெளிப்படுத்த விரும்புகிறேன்.

மாவட்ட ஆட்சித்தலைவர்கள், தங்களுடைய மாவட்டங்களில் நிறைவேற்றப்படக்கூடிய திட்டங்கள் குறித்து, கள நிலவரத்தை விரிவாக நீங்கள் இங்கே எடுத்துரைக்கலாம். இந்த அரசினுடைய திட்டங்களின் பயன் மக்களுக்கு சென்றடைகிறதா என்பதை உறுதி செய்வது குறித்து அனைவரும் தங்களுடைய கருத்துக்களில் அதை இணைத்து தெரிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுக்கும், உங்களுக்கும் அதாவது, எங்களைப் போன்ற அரசியல்வாதிகளுக்கும், உங்களைப் போன்ற அதிகாரிகளுக்கும் மக்கள் தான் எஜமானர்கள் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. ஆகவே, ஒரு ரூபாய் செலவு செய்தால், அந்த ஒரு ரூபாய் சிந்தாமல், சிதறாமல் கடைக்கோடி மக்களுக்கும்

சென்றடைய வேண்டும். அதுதான் சிறந்த நிர்வாகத்திற்கு எடுத்துக்காட்டாக அமைந்திட முடியும். ஒவ்வொரு மாவட்டத்திலும் நிறைவேற்றப்பட வேண்டிய புதிய திட்டங்கள் குறித்து ஆலோசனைகள் இருந்தால், நீங்கள் இங்கே கூறலாம். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு விதமான பொருட்கள் கிடைக்கிறது. அது மஞ்சளாக இருக்கலாம், இயற்கை வளங்கள் அதிகமாக இருக்கலாம். அவற்றை எப்படி மார்க்கெட் செய்வது, அதிலிருந்து எப்படி அரசிற்கு வருமானத்தைப் பெருக்குவது என்பது குறித்தும், விவசாயிகள், தொழிலாளர்கள், சிறுதொழில், பெருந்தொழில் உள்ளிட்ட அனைவருக்கும் பயனளிக்கக்கூடிய திட்டங்கள் என்னென்ன என்பது குறித்த கருத்துக்களையெல்லாம் நீங்கள் இங்கே தெரிவிக்கலாம் எனக் கேட்டு, நேர்மையான நிர்வாகம், வெளிப்படையான நிர்வாகம் என்பதை மனதில் வைத்துக் கொண்டு, உங்களுடைய ஆலோசனைகளை சுதந்திரமாக நீங்கள் கூறலாம் என்று கேட்டு, அந்த வகையில் உங்களுடைய கருத்துக்களைக் கேட்பதற்கு நான் ஆர்வமாக இருக்கிறேன் என்பதை மட்டும் இங்கே எடுத்துச் சொல்லி, என்னுடைய தொடக்க உரையை இதோடு முடித்துக் கொள்கிறேன்.

நன்றி.

\- - - - - -

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**